




# Voice of Jagadguru

advaitam paramanandam


an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## வஜ்ரோஸ்தவ பாரதீ




வஜ்ரோஸ்தவ பாரதீ

சிறப்பு இதழ் 2


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை




மனிதனுக்கு சௌக்கியமாக இருக்க இந்திரிய நிக்ரஹம் மிகவும் அவசியமானது. அது இல்லாதவன் கஷ்டங்கள் மேல் கஷ்டங்களைத் தான் அனுபவிக்க வேண்டிவரும். இந்திரிய நிக்ரஹம் என்றால் புலனை அடக்குதல். உதாரணமாக கண் ஒரு பதார்த்தத்தைப் பார்க்கும், காது ஒன்றைக் கேட்கும், நாக்கு ஒரு பதார்த்தத்தை விரும்பும். இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதார்த்தத்தை “வேண்டும் வேண்டும்" என்று தன் இஷ்டத்திற்கு மனிதனை இழுத்துக்கொண்டு போனால், அவன் கதி என்ன ஆகும்? அந்த அந்த இந்திரியங்களுக்குப் பிடித்ததை சம்பாதித்து கொடுத்துக்கொண்டு இருந்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி வராது. ஆசை வைத்த பொருள் கிடைக்குமா? கிடைத்தது போய் விடுமோ என்ற கலக்கத்தினால் கோபமும், எரிச்சலும் மனதைப் பாழாக்கிக் கொண்டேயிருக்கும். இப்படி அசாந்தமான (அமைதியற்ற) மனதில் சுகம் எவ்விதம் உண்டாகும் என்று பகவானே கீதையில் கூறி உள்ளார். अशान्तस्य कुत:सुखम अஶாந்தஸ்ய குத:ஸுக²ம என்று ஆகையால் மனிதனுக்கு இந்திரிய நிக்ரஹம் மிகவும் தேவை, இதைத்தான் ஸ்ரீசங்காபகவர்பாதர் தன் பாஷ்யத்தில் விஸ்தாரமாக கூறினார். इन्द्रियाणां हि विषयसेवातृष्णात: निवृत्ति या तत् सुखं न विषय विषया तृष्णा | दुःख एव हि सा | न तृष्णायां सत्या मुखस्य गन्धमात्रमपि उत्पध्यते ||
இந்த்³ரியாணாம்’ ஹி விஷயஸேவாத்ரு’ஷ்ணாத: நிவ்ரு’த்தி யா தத் ஸுக²ம்’ ந விஷய விஷயா த்ரு’ஷ்ணா | து³:க² ஏவ ஹி ஸா | ந த்ரு’ஷ்ணாயாம்’ ஸத்யா முக²ஸ்ய க³ந்த⁴மாத்ரமபி உத்பத்⁴யதே என்று. அதாவது இந்திரியங்களை தன் இஷ்டம்போல் அதன் அதன் விஷயத்திற்கு அலைய விடாமல் நிறுத்துவதுதான் சுகம். அலைய விடுவது சுகம் அல்ல. இந்திரியங்களை அதன் போக்கில் விட்டால் துக்கம்தான் மிஞ்சும். இதை நன்றாக புரிந்து கொண்டு இந்திரியங்கள் விரும்புகிற ஒன்றுமே சாஸ்வத சுகத்தை கொடுக்காது என்று மனதில் பதியவைத்து, கர்த்தவ்ய (கடமை) பாவத்தில் இருந்து வந்து வாழ்க்கையை நடத்துவது தான் தனக்கும் பிறருக்கும் நல்லது ஆகும்.



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

மனிதன் பல கார்யங்களை தினசரி செய்து கொண்டு இருக்கிறான். ஒரு சில கார்யங்களை முன்பின் யோசனை செய்யாமல் ஆசையை வளர்த்துக்கொண்டு செய்ய புறப்படக்கூடாது. அப்படி ஆரம்பித்து நடுவில் நிறுத்திவிட்டால் பரிச்ரமம் மட்டுமே மிஞ்சும். அதனை ஒட்டி நஷ்டமும் கூட வரலாம். வீடு தீ பிடிந்த பிறகு கிணறு வெட்டப்போனால் மூர்க்கத்தனம் தான் ஆகும்.



चिन्तनीया हि विपदामादौवेव प्रतिक्रिया ।
न कूपखननं युक्तं प्रदीप्ते वह्निना गृहे ॥

சிந்தனீயா ஹி விபதா³மாதௌ³வேவ ப்ரதிக்ரியா |
ந கூபக²னனம்' யுக்தம்' ப்ரதீ³ப்தே வஹ்னினா க்³ரு'ஹே ||

ஆகையால் எந்த கார்யத்தையும் ஆரம்பிக்கும் முன் நடுவில் சம்பவிக்ககூடிய கஷ்டங்களை எதிர்பார்ப்பது தான் புத்திசாலித்தனம். சில சமயத்தில் ஆரம்பித்த கார்யத்தில், எதிர்பார்க்காத கஷ்டங்கள் வந்தால், அதற்கு வேண்டிய யோசனை களெல்லாம் அனுபவசாலிகளிடமிருந்து அபிப்ராயம் வாங்கிக்கொண்டு கார்யத்தை முன்னேற வைக்க வேண்டும். இதுதான் சரியான முறை. கஷ்டங்கள் வந்துவிட்டது என்ற காரணத்தால் கடமையைச் செய்யாமல் நிறுத்திவிடுவது சரியல்ல. ஒரு விவேகி இதையே சவாலாகி எடுத்துக்கொண்டு உற்சாகம் குறையாமல் பகவான்மேல் பாரத்தைப் போட்டு, கஷ்டங்களை நீக்கிவிட்டு கார்யஸாதகன் ஆகிவிடுவான்.

இதை நன்றாக புரிந்து கொண்டு எந்த கார்யத்தையும் சுலபமாக முடித்து வர எல்லாரையும் ஆசிர்வதிக்கிறோம்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

கடவுள் சாஸ்வதமானவர். நேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர். ईशानो भूथभव्यस्य स एबाद्य उ श्व: । ஈஶானோ பூ$^{4}$த$^{2}$ப$^{4}$வ்யஸ்ய ஸ ஏபா$^{3}$த்$^{3}$ய உ ஶ்வ:




ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து, கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது. அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான், அவர் பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத்து அருளுகிறார்.

'எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டுத்தான் தோன்றுவாரா?" என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகலாம். கடவுள் எல்லா இடங்களிலும்

நிறைந்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம், ஸான்னித்யம் ஆகியவை கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அத்த விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாலிக்கிறார். என்பதே இதற்கான பதில்,

இதைத்தான் ஶ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽश्वरस्तत्रोपास्यमानः प्रसीदति । ஸர்வக3தோ(அ)ஶ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத3தி . सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थः प्रदेशविशेषपरिग्रहो न विरुध्यते । ஸர்வக3தஸ்யாபி ப்3ரஹ்மண உபாஸனார்த2: ப்ரதே3ஶவிஶேஷபரிக்3ரஹோ ந விருத்4யதே | என்று பல இடங்களில் விவரித்துள்ளார்.

ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,

अर्चादावर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत् ।
यावन्नवेद स्वहृदि सर्वभूतेष्ववस्थितम् ॥
அர்சாதா3வர்சயேத்தாவதீ3ஶ்வரம்’ மாம்’ ஸ்வகர்மக்ரு’த் |
யாவன்னவேத3 ஸ்வஹ்ரு’தி3 ஸர்வபூ4தேஷ்வவஸ்தி2தம் ||

என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது, எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈர்வரனான என்னை விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்க வேண்டும் என்று பகவான் கூறியுள்ளார்.


இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வரனை உருவ வடிவத்தில் பூஜை செய்து அவரது அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

சிருங்கேரி சாரதா பீடத்தின் 34வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீசந்திர சேகரபாரதி மஹாஸ்வாமிகள் ஆன்மீகத்தின் ஒளிபொருந்திய எடுத்துக்காட்டாக விளங்கினார். இளம் வயதிலேயே தர்மத்திலும் ஸதாசாரத்திலும் ஈர்வரபக்தியிலும் குருபக்தியிலும் அவருக்கு எல்லையில்லாத ஈடுபாடு இருந்தது. அவருடைய ஸத்குணங்களைப்பற்றி ஸ்மரிக்கும்போது ஸ்வாமி விற்பாரண்யரின் சங்கரவிஜயத்தில் உள்ள ஸ்லோகம் நினைவுக்கு வருகிறது.



द्युवनान्त इवामरद्रुमाः अमरद्रुष्विव पुष्पसञ्चयाः
भ्रमरा इव पुष्पसञ्चयेषु अतिसङ्ख्याः किल शहरे गुणाः
த்³யுவனாந்த இவாமரத்³ருமா: அமரத்³ருஷ்விவ புஷ்பஸஞ்சயா: |
ப்⁴ரமரா இவ புஷ்பஸஞ்சயேஷு அதிஸங்க்²யா: கில ஶஹரே கு³ணா: ||

(சொர்க்கலோகத்தில் எண்ணற்ற கல்பவ்ருக்ஷங்கள். அவற்றைப் போல அவ்விருக்ஷங்களில் உள்ள பூக்களும் அவற்றில் அமரும் வண்டுகளும் கணக்கிலடங்காதவை அதைப்போல சங்கரரிடம் இருந்த தற்குணங்களும் எண்ணற்றளல்.)

பால்யத்திலிருந்தே ஸ்ரீநரஸிம்மன் தன்னுடைய படிப்பிலே விசேஷ அக்கறை செலுத்திய ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஸச்சிதானந்த சிலாபினவ நிருஸிம்மபாரதீ மஹாஸ்வாமிகளின் அனுகரஹத்திற்கு பாத்ரமாக இருந்தார். அவர் ச்ருங்கேரியிலும் பங்களூரிலும் உள்ள பாடசாலைகளில் படித்து சாஸ்திரங்களில் அஸாதாரணமான நிபுணத்வம் பெற்றார். தன்னுடைய இருபதாவது வயதிலே ஸ்ரீசந்திரசேகரபாரதி மஹாஸ்வாமிகளாக ச்ருங்கேரி சாரதா பீடத்தின் அதிபதியாகி அதனுடைய செயல்பாடுகளில் மிகவும் ஸமர்த்தராக இருந்தார். மஹிமை பொருந்திய ச்ருங்கேரி ஸம்ஸ்தானத்தின் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபோதிலும் எவ்விதமான லௌகிக ஆசைகளுமின்றி எளிமையான வாழ்க்கையுடன் வாழ்ந்துவந்தார்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதன் தன் வாழ்க்கையில் சரியான முறையில் நடத்தி ஸந்தோஷமாக இருப்பதற்கான பல வழிமுறைகளை நம் முன்னோர்கள் உபதேசித்துள்ளார்கள். அவற்றை வாழ்க்கையில் கடைபிடித்து வருவது நல்லது. ஆனால் 'இது கலியுகம், காலப்போக்கே வேறுவிதமாக இருக்கிறது. தவறான முறைகள்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. நீதி, தர்மம் ஆகியவை இக்காலத்தில் ஒத்துவராது.எப்படியோ வாழ்க்கை நடத்த வேண்டும்' என்று சிலர் கூறுகின்றனர். இது தவறு கலியுகத்தில் தர்ம மார்க்கத்தைக் கடைபிடிக்கக் கூடாது என்று எங்கும் கூறப்பட வில்லை. இருட்டிவிடுகிறது என்பதால் இரவில் மற்றவ்யவஹாரங்களை நிறுத்திவிடுவதில்லையே! அது போல் கலியுகமாக நாம் இருந்தாலும் தர்மம், நீதி, ந்யாயம் ஆகியவற்றைக் கடைபிடித்தே தீரவேண்டும்.எல்லா யுகத்திலும் தர்மத்திற்கு ஜயமும், அதர்மத்திற்கு நாசமும் உண்டாகும் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

'அக்னி சுடும்' என்பது எல்லா யுகத்திற்கும் பொருந்தும். கலியுகத்தில் ஸௌக்யமாக இருப்பதற்கு பகவான் நாமத்தை உச்சாரணம் செய்ய வேண்டும். பகவானின் மஹிமையை அறிந்து ச்ரத்தையோடு வழிபாடு செய்ய வேண்டும். பாலைவனத்திலுள்ள நதியில் சிறிதளவு நீர் காணப்பட்டாலும் அது போற்றத்தக்கது. அதுபோலவே கலிகாலத்தில் நூற்றில் ஒருவனாவது தர்மமார்க்கத்தில் இருந்துவந்தால் அவனுடைய சிறிதளவிலான போற்றுதலுக்குரியதாகும். தர்மாசரணம் கூட

एतादृशे कलियुगेऽपि शतेषु कश्चित् जातारो जगति यः श्रुतिमार्ग एव ।
यत्किञ्चिदाचरतु पात्रमसौ स्तुतीनां श्लाघ्यं मितापमपि किं न मरो सरश्चेत् ॥
ஏதாத்$^3$ரு'ஶே கலியுகே$^3$(அ)பி ஶதேஷு கஶ்சித் ஜாதாரோ ஜக$^3$தி ய: ஶ்ருதிமார்க$^3$ ஏவ ।
யத்கிஞ்சிதா$^3$சரது பாத்ரமஸௌ ஸ்துதீனாம்' ஶ்லாக்$^4$யம்' மிதாபமபி கிம்' ந மரோ ஸரஶ்சேத் ॥

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை




மனிதன் எப்பொழுதும் பகலானிடம் “உலகத்தில் எல்லோரும் சௌக்கியமாக இருக்கவேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்யவேண்டும். யார் மேலேயும் த்வேஷ பாவத்துடன் இருக்கக்கூடாது. பிறர் தனக்கு ஏதாவது தப்பு செய்தாலும், மன்னிக்கக்கூடிய மனப்பான்மை இருக்க வேண்டும். ப்ரதிஹிம்ஸை செய்யும் எண்ணம் ஒருநாளும் வரக்கூடாது. இதுதான் ஸந்புருஷனுடைய லக்ஷணம். யார் பிறருக்கு கஷ்டம் கொடுக்க விரும்புவானோ அக்கஷ்டம் அவனுக்கே தான் திரும்பவரும். சுவரில் எறிந்த பந்து, எறிந்தவன் மீதே திரும்பி விழுவதைப் போல்வரும்.

कन्दुकोभित्रिनिक्षिप्त इव प्रतिफलन्मुहु: ।आपतत्यात्मनि प्रत्यो दोषोऽन्यस्य चिकीर्षतः ।கந்து3கோபி4த்ரிநிக்ஷிப்த இவ ப்ரதிப2லன்முஹு: ।ஆபதத்யாத்மனி ப்ரத்யோ தோ3ஷோ(அ)ன்யஸ்ய சிகீர்ஷத: ||

இதைப்புரிந்து கொள்ளாமல் சிலர் பிறருக்கு எப்பொழுதும் கஷ்டங்களைக் கொடுக்க துணிந்து விடுவார்கள். யாராவது ஒரு நல்ல வார்த்தை சொல்லி நிறுத்தப் பார்த்தாலும் கேட்கமாட்டார்கள். துரியோதனன் யாருடைய நல்ல வார்த்தைகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. பாண்டவர்கள் மீது எல்லாவித துன்பங்களையும் கொடுத்து வந்தான். ஒரு நாளும் அவன் பண்ணின தவறுகளுக்கு பச்சாத்தாபமும் படவில்லை. மேலும் மேலும் செய்த கர்மங்கள் கடைசியில் அவனை அழித்துவிட்டது. ஆகையால் யாரும் பிறருக்கு தீங்கு நினைக்கக் கூடாது. அப்படி ஏதாவது தீங்கு செய்தாலும் உடனே மன்னிப்பு கேட்டு அந்தத் தவறு திரும்பவும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யார் ஒருவன் தவறுகளையும் செய்து, பச்சாத்தாபமும் படாமல், மேலுக்கு மேல் அதே தவறுகளை செய்து வருவானோ அவன் கர்மங்கள் அவனை ஆழம் தெரியாத குழியில் தள்ளிவிடும்.

यस्तु पूर्वकृतं पापमविमृश्यानुवर्तते । अगाधपङ्के दुर्मेधा विषमे विनिपात्यते ||
யஸ்து பூர்வக்ரு’தம்’ பாபமவிம்ருஶ்யானுவர்ததே | அகா3த4பங்கே து3ர்மேதா4 விஷமே விநிபாத்யதே||


இதை நன்றாக புரிந்து கொண்டு நல்லபடியாக வாழ்க்கை நடத்த ஆசிர்வதிக்கிறோம்.



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

மனிதன் பல கார்யங்களை தினசரி செய்து கொண்டு இருக்கிறான். ஒரு சில கார்யங்களை முன்பின் போசனை செய்யாமல் ஆசையை வளர்ந்துக்கொண்டு செய்ய புறப்படக்கூடாது. அப்படி ஆரம்பித்து நடுவில் நிறுத்திவிட்டால் பரிச்ரமம் மட்டுமே மிஞ்சும். அதனை ஒட்டி நஷ்டமும் கூட வரலாம். வீடு நீ பிடித்த பிறகு கிணறு வெட்டப்போனால் மூர்க்கத்தனம் தான் ஆகும்.



चिन्तनीया हि विपदामादौवेव प्रतिक्रिया ।
न कूपरवननं युक्तं प्रदीप्ते बह्निना गृहे ॥
சிந்தனீயா ஹி விபதா$^3$மாதௌ$^3$வேவ ப்ரதிக்ரியா |
ந கூபரவனனம்’ யுக்தம்’ ப்ரதீ$^3$ப்தே ப$^3$ஹ்னினா க்$^3$ரு’ஹே ||

ஆகையால் எந்த காரியத்தையும் ஆரம்பிக்கும் முன் நடுவில் சம்பவிக்ககூடிய கஷ்டங்களை எதிர்பார்ப்பது தான் புத்திசாலித்தனம், சில சமயத்தில் ஆரம்பித்த கார்யத்தில் எதிர்பார்க்காத கஷ்டங்கள் வந்தால், அதற்கு வேண்டிய யோசனைகள் எல்லாம் அனுபவசாலி இடமிருந்து அபிப்ராயம் வாங்கிக்கொண்டு காரியத்தை முன்னேற வைக்க வேண்டும். இதுதான் சரியான முறை, கஷ்டங்கள் வந்துவிட்டது என்ற காரணத்தால் கடமையைச் செய்யாமல் நிறுத்திவிடுவது சரியல்ல. ஒரு விவேகி இதையே சவாலாக எடுத்துக்கொண்டு, உற்சாகம் குறையாமல் பகவான் மேல் பாரத்தைப் போட்டு கஷ்டங்களை நீக்கிவிட்டு கார்யஸாதகன் ஆகியிடுவான்.

இதை நன்றாக புரிந்து கொண்டு எந்த கார்யத்தையும் சுலபமாக முடித்துவர எல்லாரையும் ஆசிர்வதிக்கிறோம்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



சிருங்கேரி சாரதா பீடத்தின் 34வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திர சேகரபாரதி மஹாஸ்வாமிகள் ஆன்மீகத்தின் ஒளிபொருந்திய எடுத்துக்காட்டாக விளங்கினார். இளம் வயதிலேயே தர்மத்திலும் ஸதாசாரத்திலும் ஈர்வரபக்தியிலும் குருபக்தியிலும் அவருக்கு எல்லையில்லாத ஈடுபாடு இருந்தது.

அவருடைய ஸத் குணங்களைப் பற்றி ஸ்மரிக்கும்போது ஸ்வாமி விற்பாரண்யரின் சங்கரவிஜயத்தில் உள்ள ஸ்லோகம் நினைவுக்கு வருகிறது. द्युवनान्त इवामरद्रुमाः अमरदृष्विव पुष्पसञ्चयाः
भ्रमरा  इव पुष्पसञ्चयेषु अतिसङ्ख्याः किल शङ्करे गुणाः
த்$^{3}$யுவனாந்த இவாமரத்$^{3}$ருமா: அமரத்$^{3}$ரு’ஷ்விவ புஷ்பஸஞ்சயா:
ப்$^{4}$ரமரா இவ புஷ்பஸஞ்சயேஷு அதிஸங்க்$^{2}$யா: கில ஶங்கரே கு$^{3}$ணா:

(சொர்க்கலோகத்தின் எண்ணற்ற கல்பவ்ருக்ஷங்கள். அவற்றைப் போல அவ்விருக்ஷங்களில் உள்ள பூக்களும் அவற்றில் அமரும் வண்டுகளும் கணக்கிலடங்காதவை அதைப்போல சங்கரரிடம் இருந்த தற்குணங்களும் எண்ணற்றவை.)


பால்யத்திலிருந்தே ஸ்ரீநாஸிம்மன் தன்னுடைய படிப்பிலே விசேஷ அக்கறை செலுத்திய ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்மபாரதீ மஹாஸ்வாமிகளின் அனுக்ஷஹத்திற்கு பாத்ரமாக இருந்தார். அவர் ச்ருங்கேரியிலும் பங்களூரிலும் உள்ள பாடசாலைகளில் படித்து சாஸ்திரங்களில் அஸாதாரணமான நிபுணத்வம் பெற்றார். தன்னுடைய இருபதாவது வயதிலே ஸ்ரீசந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகளாக ச்ருங்கேரி சாரதா பீடத்தின் அதிபதியாரி அதனுடைய செயல்பாடுகளில் மிகவும் ஸமர்த்தராக இருந்தார். மஹிமை பொருந்திய ச்ருங்கேரி ஸமஸ்தானத்தின் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபோதிலும் எவ்விதமான லௌஹீக ஆசைகளுமின்றி எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

எப்பொழுதும் தனக்கு நல்லதே நடக்க வேண்டும்,. நல்லதே கிடைக்க வேண்டும் என்று ' மனிதன் எண்ணுகிறான். அவன் அதுபோல் எண்ணுவது நியாயந்தான், அதற்காக அவன் பல செயல்களையும் செய்துகொண்டிருக்கிறான். அதன் பயன்களையும் ஜன்மஜன்மமாக அனுபவித்துக் கொண்டு வருகிறான் ஞானம் வரும் வரை.



ஆனால் இக்காலத்தில், செயல்களைச் செய்துகொண்டு வரும் தங்களுக்கு பலன் கிடைக்குமா என்று ஒரு சிலருக்கு ஸந்தேஹம் வருகிறது. நிச்சயமாகப் பலன் கிடைக்கும் என்று தான் சாஸ்த்ரம் கூறுகிறது. எந்தச் செயலுக்கும் அதற்கான உண்டு. நல்ல செயல்களுக்கு நல்ல பலனும், கெட்ட செயல்களுக்கு கெட்ட பலனும் உண்டாகும். இதில் ஸந்தேஹமே வேண்டாம். அதனால்தான், மனிதனின் நலனை உத்தேசித்து "நல்ல செயல்களையே செய். உனக்கு இஹத்திலும் பரத்திலும் நல்ல பலனே கிடைக்கும்' என்று சாஸ்திரம் உபதேசிக்கிறது;

यथा धेनुसहस्रेषु वत्सो बिन्दति मातरम् । तथा पूर्वकृतं कर्म कर्तारमनुगच्छति ॥

யதா2 தே4னுஸஹஸ்ரேஷு வத்ஸோ பி3ந்த3தி மாதரம் |



ததா2 பூர்வக்ரு'தம்' கர்ம கர்தாரமனுக3ச்ச2தி ||

அதாவது, ஆயிரம் பசுக்களுக்கு நடுவில் தன் தாய்ப் பசு போய்க் கொண்டிருந்தாலும் கன்றுக்குட்டி தன் அம்மாவைத் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கும். அதேபோல் ஒருவன் ஏற்கனவே செய்த செயல்கள் அவனைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆகையால், செயல்களுக்கான பலனும் நிச்சயமாகக் கிடைக்கும்.

कुशलान्याशु सिद्ध्यन्ति नेतराणि कृतानि यत् ।

குஶலான்யாஶு ஸித்3த்4யந்தி நேதராணி க்ரு'தானி யத் |

சொல்லப் போனால் புண்யச் செயல்களுக்கு சீக்ரமாகவே பலன் கிடைக்கிறது. கெட்ட செயல்கள் மெதுவாகக் கெட்ட பலனைக் கொடுத்து அந்தச் செயல் செய்தவனை அழிந்துவிடுகிறது. இதை நன்றாகப் புரிந்துகொண்டு நல்ல செயல்களையே செய்ய வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதனுக்கு வாழ்க்கையில் முன்னேற தன் பரிச்ரமும், ஈஸ்வரனின் கிருபையும் தேவை, தன் கடமையை நன்றாகச் செய்து, ஈஸ்வரனின் க்ருபையையும் வேண்டிக் கொண்டால் சரியான முறையில் கார்யம் செய்ததாக ஆகும். சிலர் தன் கடமையைச் செய்யமாட்டார்கள். ஆனால் ஆசையை மட்டும் வளர்த்துக்கொண்டு ஈஸ்வரனின் க்ருபைக்கு பிரார்த்தனை செய்வார்கள். பரிணாமம் (பலன்) விபரீதமானால் ஈஸ்வரன் மீது பழியைப் போடுவார்கள். இது சரியில்லை. இன்னும் சிலர் விதிமேல் பழியைப் போடுவார்கள். இதுவும் சரியாகாது. முதலில் தன் கடமை எதுவென்று புரித்து கொண்டு, அந்தக் கடமையை (நல்ல) ஸத்கார்யமாக நினைத்து, அதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்து கர்மத்தைச் செய்ய வேண்டும். கார்யத்தை ஆரம்பம் செய்வதற்கு முன்பும், கார்யத்தை முடித்ததற்குப் பின்பும் கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும். இதுதான் சரியான வழி சிலர் ஈஸ்வரன் கிருபை எனக்கு வேண்டாம். நானே வேலைகளையெல்லாம் சாமார்த்தியமாக முடித்து விடுவேன் என்று நினைப்பார்கள். அந்த எண்ணமே வரக்கூடாது.

கார்ய ஸித்திக்குத் தன் பரிச்ரமும் (முயற்சி)கடவுளின் அருளும் இரண்டும் தேவையானது; ஓடும் வண்டியின் இரண்டு சக்கரங்கள் போல்.

காட்டில் தூங்கிக்கொண்டு இருக்கும் சிங்கத்திற்கும். கூட அதன் உணவு வேட்டை முதலில் பரிச்ரமம் இல்லாமல் கிடைப்பதில்லை. இதை நன்றாக புரிந்து கொண்டு, தன் பரிச்ரமத்தில் ஒரு குறையும் வைக்காமல், ஈஸ்வரன் கிருபைக்கு ப்ரார்த்தனை செய்தால், அந்த நம்பிக்கை கார்யஸித்தி ஆகிவிடும்.

उद्यमेनैव सिध्यन्ति कार्याणि न मनोरथैः । न हि सुप्तस्य सिंहस्य प्रविशन्ति मुखे मृगाः ॥
உத்3யமேனைவ ஸித்4யந்தி கார்யாணி ந மனோரதை2: |
ந ஹி ஸுப்தஸ்ய ஸிம்’ஹஸ்ய ப்ரவிஶந்தி முகே2 ம்ரு’கா3: ||

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wIaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்